## Slow learners Commerce 8 Marks Important Q & A

**1.இந்துகூட்டுக்குடும்பம்:**

1.இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது.
2.இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள்ஆகியோர் அடங்குவர்.
3.அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.
4.இக் குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது, அவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார்.
5.இந்துகூட்டுக்குடும்பத்தில்பெண்களுக்குசேர்ந்துவாழவும், திருமணம்செய்துகொள்ளவும்1956சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது..
6.இந்து கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும்.
7.1985ஆண்டு சட்டத்தின்படி ஆண்களை போலவே பெண்களுக்கும் சமஉரிமை உண்டு.
8.அஸ்ஸாம், மேற்குவங்காளத்தில் தாயபாகாசட்டமும், இதர பகுதிகளில் மிட்டக்சராசட்டமும் இந்துகூட்டுக்குடும்பம் பின்பற்றுகிறது

**2.பன்னாட்டு நிறுமம்**: பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.
நைல்H.ஜேகோபி – ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.
இதன் சிறப்பியல்புகள்: 1. ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்.
2. மிகப் பெரிய அளவில் செயல்படும்.
3. அயல்நாடுகளில்உள்ள கச்சாப்பொருட்கள்,பணியாட்கள் சந்தையைப்பயன்படுத்திக்கொண்டு போக்குவரத்துசெலவுகள் குறைத்தல்.
இன்று உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் செயல்படுகின்றன.அமெரிக்காவில் 60% சதவீத பன்னாட்டு நிறுமங்கள் ஆசிய நாடுகளில் 30% ஆப்பிரிக்காவில்10%நிறுமங்களும் செயல்படுகின்றன.
**பன்னாட்டு நிறும எ.கா.:** யூனிலிவர் லிமிடெட், யூனியன் கார்பைடு, இன்டர்நேசனல் பிசினஸ் மெசின், பிலிப்ஸ்

**3.கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் :**

1. நிறுவனத்தின் பெயர்
2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்
3. கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை
5. கூட்டாண்மையின் காலவரையறை
6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை
7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை.
8. இலாப பகிர்வு விகிதம்

**4.கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள்**

1.நிறுவனத்திற்கு எதிராகவோ அல்லது ஏனையகூட்டாளிகள் மீதோ கூட்டாண்மை சட்டத்தின்கீழ் பதிவுரா நிறுவனத்தின்மீது ஒரு கூட்டாளி வழக்குதொடர முடியாது.
2.மூன்றாமவர்மீது எந்தஉரிமையியல் நீதிமன்றத்திலும் பதிவுராநிறுவனமொன்று வழக்கு தொடர முடியாது.
3.நிறுவனத்திற் கெதிராகவோ கூட்டாளிகளுக்கெதிராகவோ மூன்றாமவர் எவரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
4.தனது கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
5.பதிவுசெய்யாநிறுவனம் மூன்றாம்நபருக்குஎதிராக ரூ.100க்குமேல் திரும்பப்பெற இயலாது.
6.நிறுவனத்தை கலைக்கக் கோரி,கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்ககோரி அல்லது கலைப்பின் போது கணக்குகளை தீர்த்துக்கொள்ள கூட்டாளியொருவர் வழக்கு தொடுக்க முடியாது.
7.நிறுவனத்தின் வியாபாரகுறிகள், பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக்கூடாது என தடுக்கும் உரிமையை கூட்டாண்மை இழக்கும்.

**5.கூட்டாண்மையில்இளவர்:**

1.கூட்டாளிஇளவர்என்பவர்18வயதுபூர்த்திஅடையாதவர்.
2.சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர்.
3.ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்.

**உரிமை வயதை அடையும் முன் :**

1) தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை
2) நிறுவனக் கணக்குகளை பார்வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை
3)தொழிலின்சொத்துகள்இலாபத்தில்அவருக்குஉள்ளபங்குஅளவிற்குமட்டும்அவருக்குப்பொறுப்புஆகும்.

**உரிமை வயதை அடைந்த பின்:**

1) உரிமை வயது அடைந்தபின்பு தொடா;ந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும்.
2) அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார்.
3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்.

**6.கூட்டாளிகளின் வகைகள்:**

1. **உழைக்கும் கூட்டாளி** : தொழிலில் முதலிடுவர். தொழில் நிர்வாகத்தில்பங்கு பெறுவார். மேலாண்மை கூட்டாளி (அல்லது) பொதுக்கூட்டாளி என அழைக்கப்படுவர்.
2. **உழையா கூட்டாளி** : தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவர் உறங்கும் கூட்டாளி (அல்லது) முதலிடும் கூட்டாளி என அழைக்கப்படுவர்.
3. **பெயரளவு கூட்டாளி (பாசாங்கு)** : இவர் தொழிலில் முதலிடுவதில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதில்லை. கூட்டாண்மையில் தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து உதவுகிறார். வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார்.
4. **இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி** : இக்கூட்டாளி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார். நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார். இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது.

7.**அமைப்பு முறை ஏடு:** நிறுமத்தின் செயல்பாட்டு எல்லைகளை நோக்கங்களை வரையறுத்து காண்பிப்பது. நிறுமத்தின் பெயர் பதிவலுவலகம் உள்ள இடம் அனுமதிக்கப்பட்ட பங்குமுதல் நோக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பது.

**அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் : அ)பெயர்குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** :நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.

**இ)இடங்குறித்த உட்பிரிவு** :பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும்.

**ஈ)பொறுப்பு குறித்த உட்பிரிவு** : இப்பிரிவில் தான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் கலைப்பின் போது போதிய சொத்துக்கள் இல்லாதநிலையில் உறுப்பினர் கொண்டுவரும் தொகை குறிப்பிடப்படும்.

**உ)முதல் குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பங்குகளின் வகைகளும் அதன் முதலின் விவரங்களும் கொடுக்கப்படும்.

**8.செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள்**

1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** யின் விவரங்கள் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும்.
2.பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை
3.பங்குச் சான்றிதல்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து
4.பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல்
5.பங்கு முதலை மாற்றி அமைத்தல்
6.இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு
7.இயக்குநரவை கூட்டங்கள்
8.நிறுமக் கலைப்பு

**9.பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:**

1. வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும்.
2. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும்.
3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது.
4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும்.
5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.
6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**10.பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய நிபந்தனைகள்:**

1) நிறுமச் செயல்முறை விதிகள் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும் அதிகாரத்தை நிறுமத்திற்கு வழங்கியிருக்க வேண்டும்.
2) அழைப்பு பணம் செலுத்த தவறியதால் மட்டுமே பங்குகளை பறிமுதல் செய்யலாம்.
3) பங்குநர்களிடமிருந்து பெற வேண்டியுள்ளது வேறு எக்கடன் நிலுவைக்காகவும் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யக்கூடாது.
4) அழைப்புப்பணம் செலுத்துமாறு பணம்செலுத்தத்தவறிய உறுப்பினர்களுக்கு குறைந்தது14நாள் அறிவிக்கையாவது தர வேண்டும்.
5) பங்குகளை ஒறுப்பிழப்பு செய்து அவை தீர்மானம் நிறைவேற்றிப் பங்குகள் பறிமுதல் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

**11.முறைகேடான ஒதுக்கீடு:**

அ. பங்கொன்றின் இயல்மதிப்பில் குறைந்தது 5%அளவிற்காவது விண்ணப்பபணம்பெறாமல் பங்குகளைஒதுக்கீடு செய்தல் அல்லது
ஆ. தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்தளவு பங்கெடுப்பு பெறாதபோதும் பங்குகளைஒதுக்கீடு செய்தல் அல்லது
இ. பங்கு விண்ணப்பப் பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைத்திருக்காமல் ஒதுக்கீடு செய்தல் அல்லது
ஈ. தனி ஏற்பாட்டின் மூலம் பங்கு முதல் திரட்டினால் தகவலறிக்கை ஒன்றை நிறுமம் வெளியிடாது. தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையைத் தாக்கல் செய்யாமலேயே செய்யப்படும் ஒதுக்கீடும் முறைகேடான ஒதுக்கீடாகக் கருதப்படும்.

**12.ஒரு நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலைகள்:**

**1.இயக்குநர்களாக:** நிறுமத்தின் ஒப்பந்தத்தில் ஈடுபடும் போது முகவர்களாக இயக்குநர்கள் செயல்படுகின்றனர். இயக்குநர்கள் தங்கள் செயல்களால் நிறுமத்தைக் கட்டுப்படுத்துகிறார்.

**2.பொறுப்பான்மையர்களாக** : நிறுமத்தின் சொத்துகளை நிர்வகிக்கும் பொழுது இயக்குநர்கள் பொறுப்பான்மையாளர்களாக செயல்படுகின்றனர்.அவ்வாறே அதிகாரங்களைப் பயன்படுத்தும்பொழுது அதே நிலையில் உள்ளனர்.

**3.அதிகரிகளாக** : இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.நிறும மேலாண்மையில் ஈடுபடும் பொழுது அதன் முதன்னைச் செயலதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.

**13.ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?** இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர். இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர்.

**அ. நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள்:** ஒவ்வோராண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர்.

**ஆ. இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள்** கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம். தற்காலிகமாக எழும் காலி இடங்களை இயக்குநரவையே நியமித்து நிரப்பலாம். (இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில்) மாற்று இயக்குநர்களையும் இயக்குநர் அவை நியமிக்கலாம்.

**இ. மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள்:** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் நிறுமத்திற்கு கடன் வழங்கியிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம்.

**ஈ. மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்:** நிறுமச் சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கலாம்.

**14.ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வேண்டின் நிபந்தனைகள் :**
கூட்டத்தை கூட்டும் அதிகாரம் பெற்றவர்களால், கூட்டம் உரிய முறையில் கூட்டப்பட வேண்டும்.
அதாவது 1.இயக்குநர் அவை 2.பங்குநர்
3. நிறுமச் சட்ட அவை சட்ட விதிகட்குப்பட்டு கூட்டம் அமைய வேண்டும். அதாவது உரிய தலைவர் தலைமையில் நடைபெறுதலும், கூட்டத்திற்குச் சட்டம் வகுத்துள்ள குறைந்தளவு உறுப்பினர்கள் வருகை தருதலும் இன்றியமையாதவை.
சட்ட விதிமுறைகளின் படியும், செயல்முறை விதிகளின்படியும் கூட்டம் நடைபெற வேண்டும்.
முறைபிறழாது, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நடைபெற வேண்டும்.

**15.தனிவரையறு நிறுமத்தின் சலுகைகள்:**
1. தனி வரையறு நிறுமம் ஒன்றே இரு நபர்களுடன் உருவாக்கம் செய்துகொள்ள முடியும், இதனால் இதனை அமைப்பதும் எளிதாகிறது. சிறந்த நிர்வாகம் நடைபெற ஏதுவாகிறது.
2.கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன் தனி வரையறு நிறுமமானது தொழில் தொடங்க முடியும். பொது வரையறு நிறுமத்திற்குத் தேவையான தொழில் தொடக்கச் சான்றிதழ் பெறத்தேவையில்லை.
3. பங்கு முதலைத் திரட்ட பொதுமக்களிடம் பங்குகளை வாங்கிட அழைக்கும் தகவல் அறிக்கையை வெளியிட தனி வரையறு நிறுமத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் முன்கூறியபடி பங்கு முதல் திரட்டும் செலவு மிகவும் குறைவாகிறது.
4. குறைந்தளவு பங்கெடுப்பு பெற்ற பிறகுதான் பங்குகளை ஒதுக்கவேண்டும் என்ற விதியிலிருந்து தனி வரையறு நிறுமத்திற்கு விலக்கு தரப்பட்டுள்ளது.
5. பொது வரையறு நிறுமம் கட்டாயம் கூட்டவேண்டிய சட்ட முறைக் கூட்டத்தைத் தனிவரையறு நிறுமம் கூட்ட வேண்டுவதில்லை.
6. மீண்டும் முதல் திரட்ட பங்கு வெளியிடும்பொழுது தற்பொழுதுள்ள பங்குநர்கட்கு புதிய பங்குகளை ஒதுக்க வேண்டும் என்ற நிபந்தனை பொருந்தாது.
7. தனி வரையறு நிறுமம் இரு இயக்குநர்களுடனேயே செயல்படமுடியும்.
8. இயக்குநர்கள் குறிப்பிட்டளவுத் தகுதிப் பங்குகளை வைத்திருப்பதாக அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பெற்று விடுவதாக உறுதிமொழியைத் தனி நிறுமமாயின் தர வேண்டியதில்லை.

**16.முதலீட்டாளர் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீடுளின் மீது லாபம் பெறுவதில் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின்மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களைவாங்கிவிற்பதின்மூலம் கிடைக்கும்லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**17.பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு :**

| **அடிப்படை** | **பங்குகள்** | **கடனீட்டுப்பத்திரங்கள்** |
|---|---|---|
| பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும் கடன் பத்திரதாரர் நிறுமத்தின் கடனாளர்ஆகிறார் |
| லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திரவட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்பு தான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும். | அத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

**18.பொதுத்துறைக்கும் தனியார்துறைக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| **பொதுத்துறை** | **தனியார்துறை** |
|---|---|
| சேவை மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியன இரட்டை நோக்கங்களாக உள்ளன. | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| ஒரு சிலரிடம் செல்வமும் வருமானமும்செரிவடைவதை தடுக்க முடியும். | பொருளாதார வலிமை செரிவடைவதை துண்டுகிறது. |
| தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்று நடத்துதல் | தனியார் துறை எப்பொழுதும்அபாயம் குறைவாக உள்ளது மற்றும் லாபம் அதிகமாக உள்ள தொழில்களை மட்டுமே நடத்தும் |
| நாட்டின் வழங்களை பாதுகாக்கின்றன. | காடுகள் சுரங்கங்கள் போன்றவற்றை தனியார் துறைதன்சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| பின்தங்கியபகுதிகளில் தொழில்நிறுவனத்தை தொடங்கி அனைத்து பகுதிகளிலும் சமமாக வளர்ச்சிபெறசெய்படுகிறது | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்புவதில்லை. |

**19.சட்டமுறை அறிக்கையில் காணப்பட வேண்டியவை:**
1. ரொக்கத்திற்கு மற்றும் ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக வெளியிடப்பட்டுள்ள பங்குகள் பற்றிய விவரங்கள்.
2. பங்குகள் மீது பெற்ற மொத்த பணம் மற்றும் பிற வழிகளில் பெற்ற பணம்.
3. அறிக்கை தயார் செய்வதற்கு 7 நாட்களுக்கு முன்புவரை பெற்ற பெறுதல் செலுத்தல் பற்றிய சுருக்கமான கணக்கு.
4. தொடக்கச் செலவுகள் குறித்த மதிப்பீடு அல்லது செலவழித்தவை.
5. கூட்டஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டியுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் அவற்றில் செய்யவேண்டிய மாற்றங்கள்குறித்த விவரங்கள்.
6. நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களும் அதற்கான காரணங்களும்.
7. பங்கு அல்லது கடனீட்டுப்பத்திர வெளியீட்டில் இயக்குநர்கட்கு செலுத்தியுள்ள அல்லது செலுத்த வேண்டியுள்ள கழிவு அல்லது தரகுத் தொகை.
8. இயக்குநர்கள் மேலாண்மை இயக்குநர்கள் மேலாளர் செயலர் ஆகியோர் குறித்த விவரங்கள்.

**20.கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய முறைகள் :**
கூட்டுறவு சங்கச் சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சங்கத்தின் படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும்.
ஒரு ஊரைச் சேர்ந்த பொதுநலம் உள்ள ஏதேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவுச் சங்கத்தை தோற்றுவிக்கலாம்.
கூட்டுறவுச் சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விருப்பத்தை விண்ணப்படிவ மூலம் தெரிவிக்க வேண்டும்.
அந்த விண்ணப்ப படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பெயர்.
அதில் சங்கத்தின் பெயரும், விலாசமும், நோக்கங்களும், முதல் உறுப்பினரின் பொறுப்பு ஆகியவற்றை குறிக்க வேண்டும்.
விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகளையும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இணைத்திருக்க வேண்டும்.
பதிவாளர் பத்திரங்களை முறையாக பரிசீலித்து அவை சட்டப்படி உள்ளனவா என்பதை ஆய்வு செய்வார்.
அவர் முழு திருப்தியடைந்தவுடன் சங்கத்தினுடைய பதிவேடுகளில் கூட்டுருவாக்க பதிவு சான்றிதழைக் கொடுப்பார்.

**21.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக:**
வரைவிலக்கணம்: சில்லறை விற்பனை செய்யும் துறைவாரி அமைப்பு நான்கு அடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப்பொருள் சுயசேவைப்பிரிவு மாமிசம் பால் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள் விற்பனை செய்யும் இடம் சலுகை அடிப்படையில் துறைகளை குத்தகைக்கு நடத்தம் இடம் என்று M.M.ஜிம்மர்மென் வரையறுக்கிறா;.
சிறப்பியல்புகள்
1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. அரிதானபொருட்கள்கூடஇங்குவிற்பனைசெய்யப்படும்.

**22.கூட்டுறவுஅமைப்பின் குறைபாடுகள்:**
**1)திறமையற்ற மேலாண்மை:**கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது.
**2)ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.
**3)உரிமையை மாற்ற இயலாமை:** கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைத் திருப்பிக்கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம்.
**4)கடன் வசதியின்மை:** உறுப்பினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை.

**23.பொதுகழகத்தின் இயல்புகள்:**
**1.தனித்தியங்கும்சட்டத்தன்மை:** இதுஅதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.
**2.அரசு முதலீடு:** அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும்.
**3.நிர்வாகம்:** பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.
**4.அரசு தலையீடின்மை:** இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது.சுதந்திரமாக தம் கொள்கைக் கழகங்கள் செயல்படுத்தலாம்.

**24.துறைவாரி அமைப்பின் இயல்புகள்:**
1. தேவைப்படும் நிதி முழுவதையும் அரசே அளிக்கிறது.
2.இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி இயக்கம் குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைகளுக்கும் பதில் சொல்லும் கடமை அந்த அமைச்சகத்திற்கு உண்டு.
3.இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது.
4.இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின் மூலம் ஒதுக்கப்படுகிறது.
5. இதன் வரவு - செலவுத் திட்டம் அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும்.
6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது.

**25.போல்ட்:** என்பது மும்பை பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும்.
**போல்ட்டின்ஆற்றல்கள்:** 1.மனிதசெயல்பாட்டுதொகுதிகளில் இயற்கையாகவேஅமைந்திருக்கின்றசெயல்திறமின்மையை போக்குகின்றது.
2. பங்கு மாற்றங்களின் வாணிக கொள்திறனை அதிகரிக்கின்றது.
3. பொருத்தி வராத வணிகத்தை தவிர்க்கிறது.
4. அறிவிப்புகள் நடவடிக்கைகளின் நிலையை தாமதப்படுத்துவதில்லை.
5. பங்குகளின் விலைகள், குறியீடுகள் போன்ற தகவல்களை உபயோகிப்பாளருக்கு அளிக்கின்றது.
6. சிறந்த கட்டுப்பாட்டிற்கு பல வகையான வரம்புகளை விதித்திருக்கின்றது.